
இறையருள் மாலை
"காப்பியக்கோ"
ஜின்னாஹ்
ஷரிபுத்தீன்

# இறையருள் மாலை

# இறையருள் மாலை

காப்பியக்கோ

ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

அன்னை வெளியீட்டகம்

மருதமுனை

# ஆசிரியரின் வெளிவந்த நூல்கள்

**காவியங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | மஹ்ஜபீன் காவியம் | 603 செய்யுள்கள் | 1992 |
| 2. | புனித பூமியிலே காவியம் | 1032 செய்யுள்கள் | 1998 |
| 3-4. | ஜின்னாஹ்வின் இரு குறுங் காவியங்கள் | | 2001 |
| | *பிரளயம் கண்ட பிதா -* | *224* செய்யுள்கள் | |
| | *தாய்க்கென வாழ்ந்த தனயன் -* | *191* செய்யுள்கள் | |
| 5. | பண்டார வன்னியன் காவியம் | | 2005 |
| 6. | திருநபி காவியம் | 1454 செய்யுள்கள் | 2006 |
| 7. | தீரன் திப்புசுல்தான் காவியம் | 1607 செய்யுள்கள் | 2010 |
| 8. | வாத்தியார் மாப்பிள்ளை காவியம் | 729 செய்யுள்கள் | 2011 |
| 9. | எல்லாள காவியம் | 1460 செய்யுள்கள் | 2013 |
| 10. | நாயனொடு வசனித்த நந்நபி (மூஸாநபி காவியம்) | 600 செய்யுள்கள | 2014 |
| 11. | அன்னை கதீஜாவும் அண்ணலார் குடும்பமும் காவியம் | 1249 | 2017 |
| 12. | மைவண்ணன் காவியம் செய்யுள்கள் | 1357 செய்யுள்கள் | 2020 |

**கவிதைத் தொகுதிகள்**

| | | |
|---|---|---|
| 13. | முத்துநகை | 1989 |
| 14. | பாலையில் வசந்தம் | 1989 |
| 15. | பனிமலையின் பூபாளம் | 1995 |
| 16. | திருமறையும் நபிவழியும் | 2007 |
| 17. | வல்லுவம் | 2012 |
| 18. | விமர்சனப் பார்வையில் வாழும் எழில் காவியங்கள் | |

**சிறுகதைத் தொகுப்பு**

| | | |
|---|---|---|
| 19. | பெற்றமனம் | 2003 |
| 20. | வேரறுந்த நாட்கள் | 2008 |

**புதினம்**

| | | |
|---|---|---|
| 21. | கருகாத பசுமை | 2000 |
| 22. | முக்காழி | 2019 |

**சிறுவர் இலக்கியம்**

| | | |
|---|---|---|
| 23. | கடலில் மிதக்கும் மாடிவீடு | 2002 |
| 24. | அகப்பட்ட கள்வன் | 2003 |
| 25. | எங்கள் உலகம் | 2003 |
| 26. | ராகுலுக்கு ஒரு புதுவண்டி | 2008 |
| 27. | சிறுமியும் மந்திரக் கோலும் | 2010 |

**மொழிமாற்றக் கவிதைகள்**

| | | |
|---|---|---|
| 28. | அன்பின் கருணையின் பேரூற்று | 2010 |
| 29. | "கேள்வியும் பதிலும்" | 2011 |

# சமர்ப்பணம்

அன்னை கதீஜாவும் அண்ணலார் குடும்பமும்

காவிய கொடைநாயகர்

தமிழ்நாடு வழுத்தூர்

அறிவியல் அறிஞர்

வெள்ளம்ஜி ஜமால் முஹம்மத் இக்பால்

அவர்களின் பெற்றோர்

வெள்ளம்ஜி ஜமால் தாவுது

தம்பதியினருக்கே

இந்நூல் சமர்ப்பணம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | இறையருள் மாலை |
| விடயம் | : | கவிதை |
| ஆசிரியர் | : | காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் |
| © பதிப்புரிமை | : | ஹம்சியா பரீதா |
| வெளியீடு | : | அன்னை வெளியீட்டகம்<br>மருதமுனை |
| அட்டைப்படம் | : | ஆஸிப் புஹாரி |
| நூல் வடிவமைப்பு | : | இராஜபுத்திரன் யோகதாசன் |
| பக்கங்கள் | : | |
| பிரதிகள் | : | 1000 |
| பதிப்பு | : | 2021 |
| விலை | : | ரூபா 350 |
| ISBN | : | |
| BAR CODE | : | |

# இறையருள் மாலை

## நூல்

## காப்பு

நாடினேன் நானும்மாலை நற்றமிழில் பாடக்கை
கூடவருள் செய்யெம்மைக் காப்பவனே -- பாடலிலே
யாப்பு பொருள்குற்றம் எள்ளளவுந் தோன்றாமல்
காப்பவன்நீ நின்னருளே காப்பு

## அவையடக்கம்

பெரும்புலவர் பற்பலபேர் பாடியுள்ளார் மாலை
கரும்பனைய பாக்களிலே நானும் - லிரும்பினேன்
பாடுதற்கே வான்கோழி தேகைமயில் கண்டேதான்
ஆடமுயன் றாற்போல தான்

# இறையருள் மாலை

## நூன்முகம்

மாலை இலக்கியங்கள் வந்துளவாம் செந்தமிழில்
கால்மாறித் தோன்றும் கலைவடிவம் - சாலச்
சிறந்தகவி ஆரம்போல் தோன்றுமது யாப்பில்
அறிவுமிக்கோர் ஆற்றுந் தமிழ்.

பாவடிவில் பற்பலவும் பெற்றுவரும் ஒன்றையொன்று
மேவியதாய்ப் பல்விகற்பங் கூடிவரும் - ஆவின்
நிரையொக்கும் செய்யுள் நடைதளரா வாகாம்
அறிவுமிக்கோர் ஆற்றுந் தமிழ்.

நானுமொரு மாலைசெய்ய நாடினேன் நற்றமிழில்
வானோன் கருணையினை வேண்டுவதாய் - வானோன்
அருள்நபியை அண்டிப்பின் ஆகிறாவில் ஒன்ற
விரும்பிமன் றாடுவதே போல்

நல்லோர் பலரும் நயந்தார் படைக்கவென்றார்
சொல்லினுயர் பேராசான் சேமுமு - நல்லாக்கம்
பாற்பட்ட தாகுமென்றன் நாட்டங் கருக்கொள்ளச்
சாற்றிடுவேன் நன்றியவர் பால்

என்றும்போல் என்றன் இலக்கியங்கள் சீர்தூக்கி
நன்றும் பிறவும் நவில்கின்ற - என்நண்பன்
அல்அசூமத் தம்பினுக்கும் ஆகும் திருப்பொருத்தம்
அல்லாஹ்வின் ஆசிபெற வே

பின்னட்டை தன்னில் படைப்பாளி தன்குறிப்பை
என்நண்பர் தாஸிம் எழுதியுள்ளார் - முன்னுமென்றன்
நூல்களுக்கு நாமமிட்ட நல்லகவி வாணரிவர்
சால்புறவே நன்றியவர்க் காம்

என்னண்ணன் செல்வமகன் ஆஸிப் புஹாரியேதான்
முன்போன்று நூல்முகத்தை முத்ததாக - சொன்னதிலும்
வாகாய் வடிவமைத்தார் வாழியவர் பல்லாண்டு
தேகநலத் தோடிறையே காப்பு

இசுலாத்தின் தூண்களைந்தும் அல்லாஹ்வின் வேதமொடு
விசுவாசங் கொண்டநபி போதம் - பிசகான
பஞ்சமா பாதகமும் பண்ணவனின் நாமங்களும்
தஞ்சம் கருவிதற்குத் தான்.

தொண்ணூறோ டொன்பதென வாகுந்திருநாம்
பண்ணுக்கென் றேற்பப் பொறுக்கித்தான் - விண்ணோன்
பெயர்கொண்டேன் சிற்சிலதைப் பங்குறநான் செய்ய
வயப்பட வில்லையிறை காப்பு.

கட்டளைக்க லித்துறையில் கற்றோரும் போற்றவெனக்
கட்டினேன் பாமாலை கட்டளைக்கென் - றொட்டியதாய்
நாலடி ஐந்தேசீர் நண்ணும் விளங்காயில்
மேலும் வருமாறே தான்.

எழுதியெழுத் தெண்ணின் பதினாறாம் நேரில்
வழுவா பதினேழ் நிரையில் - முழுவதுமே
வெண்டளையில் செய்யுள் விரவிவரும் ஒன்றெதுகை
கொண்டதது ஏகாரம் ஈற்று

அறுசீர் விருத்தம் அமையும்பா மாலை
முறையாத் தொடுக்க மறையோன் - பெறுநாமம்
ஏற்றுவரும் பாக்களவை எண்ணிக்கைக் குறைவுண்டு
குற்றம் பொறுக்கும் இறை

# நூல்

## இறையருள் வேட்டல்

அருட்கொடை அண்ணல் அவனிக்கென் றல்லாஹ்
அளித்தனைநீ
உருவிலாய் ஒன்றேயென் றாகினாய் ஒப்பில்
உயர்ந்தவனே
கருணையில் மிக்க கொடையருன் வல்லோய்
மறுமையிலே
திருநபி யோடுறத் தக்கன செய்நீ
தயாபரனே.

1

**கலிமா**

வணங்கிடத் தக்கவன் வேறிலை என்றிடும்
மந்திரத்தை
இணங்கி மொழிந்தவர் ஈமானைக் கொண்டவர்
நாமுமதை
இணங்கி மொழிந்தோம் இறைநபி ஆணை
மறுமையிலே
வணங்கிடத் தக்கனே வாய்ப்பளி அன்னார்
அருகினிலே.

2

### தொழுகை

சுபஹொடு மற்றும் லுஹருடன் அஸ்ரும்
மஹரிபிஷா
சுபமாய்த் தொழுதிட வல்லமை தந்தாய்
தனியவனே
சுபமே அனைத்துமெம் வாழ்வி லதுபோல்
மறுமையிலும்
நபியொடு வாழ்ந்திட நல்லருள் செய்குவாய்
நாயகனே.

3

### நோன்பு

நோன்பினை நோற்றிட நாயனே எம்மைப்
பணித்ததன்பின்
நோன்பின் பயனாய் நலம்பெறச் சொர்க்கம்
எமக்களிக்கும்
மாண்பினை ஏற்றாய் முதல்வா மறுமைத்
தலத்தினிலே
மாண்புற எம்மை முஹம்மதர் அண்டைவை
முன்னவனே.

4

**ஸக்காத்**

ஏழை வரியை இயம்பிய வாறே
இடப்பணித்தாய்
வாழ்வில் பிறர்நலம் வேண்டியு ழைத்திட
வல்லவனே
தாழ்பணிந் தேற்றோம் தருமம் தலையாய்
மறுமையிலே
தோழரோ டெம்மையுஞ் சேர்த்திடு நாதர்
அருகினிலே.

5

**ஹஜ்**

அன்று பிறந்தவோர் பாலக னாக
அழுக்ககற்றி
நன்றெம துள்ளம் நிமலநீ தூய்தாய்
நலமருள்வாய்
குன்றா தருள்செய்நீ காவல "ஹஜ்"என்
கடமையையும்
நன்றெனத் தந்தாய் நபியொடு தோன்ற
அருளுவையே.

6

**திருமறை**

வழிகெடார் மாந்தர் வரித்திடில் குர்ஆன்
வழிமுறையைத்
தொழுதிடத் தக்கோன் திருவருள் அஃதுறும்
மானிடர்க்கே
அளித்தவன் நீயே அருமை நபிபால்
மறுமையிலே
எழுந்திடச் செய்யவர் பக்கல் உறைந்திடத்
தூயவனே.

7

**நபிமொழி**

அருள்நபி சொல்செயல் அன்னார் அனுமதித்
தேற்றவைகள்
கருத்தினி லோர்ந்தோர் கடைப்பிடித் தாலவர்
காப்பவனின்
கருணையைக் கொள்வார் கடைத்தேறும் பேற்றினர்
அண்ணலொடு
மறுமையில் சேர்வார் முதல்வா எமக்கும்
அருளுவையே.

8

**பாவவிமோசனம்**

பவஞ்செறிந் துள்ளவிப் பூவினில் நாமுமே
பாவிகளாய்ப்
பவம்புரிந் திட்டனம் பண்ணவா எம்பால்
பரிவுகொண்டே
அவைபொறுத் தேற்றம் அருளுவாய் பின்னாள்
மறுமையிலே
கவலற வாழக் கருணைசெய் காருண்யர்
பக்கலிலே

9

**பாவ விமோசனம்**

திருமறை ஓதிய சீர்வழி எம்மான்
திருமொழிகள்
கரமிருந் தன்னவை காண்கிலா தோராய்க்
கடைவழியில்
பொருந்தினோம் வாழ்வைப் பழிதனை ஏற்றோம்
பொறுத்தருளி
மறுமையில் நாயகர் மன்றிலில் எம்மையுஞ்
சேர்க்குவையே

10

**பொய்**

சத்தியங் கொன்றேபொய் சொல்லிட வேண்டாம்
எனமொழிந்து
சத்தியத் தூதைத் தரணிக் குரைத்துத்
தனதுபணி
நித்திய னேற்க நிறைவுசெய் நாயகர்
மன்றிலிலே
நத்தவை நாயனே நாளை மறுமையில்
நம்மினையே

11

**களவு**

என்மகள் பாத்திமா என்றிருந் தாலும்
பிறர்பொருளைத்
தன்வயங் கொண்டிடில் தப்பிழைத் தாரவர்
கையினைநான்
முன்னவன் கட்டளை மாறேன் களைவேன்
எனவுரைத்த
அண்ணல் நபியுடன் ஆகிறத் தொன்ற
அருளுவையே

12

**சூது**

மாற்றார் உடைமையை முற்றுந் தவறதாய்ச்
சூதுவழி
ஏற்பது பாவம் இறைமறை ஏவல்
எனப்புகன்று
மாற்றார் பொருளை மதித்துமே காத்தவர்
கையளித்த
போற்றுதற் கேற்றார் பயகம்பர் பாலெமைச்
சேர்க்குவையே

13

**கொலை**

காரண மின்றிக் கொலைசெயின் செய்தவர்
குற்றமதை
ஓர்ந்தறிந் துற்றவை ஒப்பிடுங் காலவர்
ஆவியினைப்
பார்விடுத் தோட்டுதல் பண்ணவன் தீர்ப்பெனக்
கூறியமான்
சேர்ந்து மறுமையில் தங்கிடத் தூயோய்
அருளுவையே

14

**காமம்**

காலிடைப் பட்ட குறியினைக் காக்கவே
கூறியிறை
வேலியைச் சொல்லி வரம்பென நான்கை
வரையறுத்தே
பாலின மோகம் பவமென வல்லோன்
பணித்தனெனும்
சீல முரைத்த நபிகளா ரோடெமைச்
சேர்க்குவையே

15

அல்லாஹ்வின் அழகுத் திருப்பெயர்கள் 99
அவற்றுள் இவண் 75
அர் ரஹ்மான் (அளவற்ற அருளாளன்)
படைத்தவை அனைத்தும் மக்கள்
பொதுவென வாகும் அஃதைக்
கொடுத்தவன் அல்லாஹ் என்னும்
காரண முரைத்து ரஹ்மான்
கொடைதனை யனுப விக்கக்
கூறிய நபிக ளோடே
அடுத்துள வாழ்வில் எம்மை
ஆக்குக யாரஹ் மானே.

16

அர் ரஹீம் (நிகரற்ற அன்புடையோன்)

புண்ணியம் புரிந்த நல்லார்
பக்கலில் பரிவு நாடிக்
கண்ணியம் செய்வான் பின்னாள்
கடைத்தேற வழிச மைப்பான்
முன்னவ னென்றே யன்னான்
மகிமையைச் சொன்ன எம்மான்
தன்னொடு மறுமை நாளில்
சேரமை யார ஹீமே

17

அல் மலிக் (பேரரசன்)

ஆண்டவர் கோடி கோடி
ஆளவென் றமைவோர் கோடி
மாண்டவர் போக இன்னும்
வருபவர் தமக்கும் மேலாய்ப்
பூண்டனன் முதன்மை அல்லாஹ்
பெரியவன் என்று ரைத்தார்
மீண்டிடும் போழ்தி லெம்மை
முகிழவை யாம லிக்கே

18

அல் குத்தூஸ் (மிகப் பரிசுத்தமானவன்)
குறையேது மில்லா ரில்லை
குவலயத் தனைத்துப் பேரும்
குறைசிறி தேனுங் கொண்டே
காண்பராம் விலக்கொன் றில்லை
மறையருள் செய்த வல்லோன்
மட்டிலுங் குறைக ளற்றோன்
அறியென்பா ரோடு மீள
அருள்புரி யாகுத் தூஸே

19

அஸ் ஸலாம் (சாந்திமயமானவன்)
இருமையும் மாந்தர் எந்த
இடருமே இலாதோ ராகப்
பொருந்திவாழ் பாக்கி யத்தைப்
பெறவருள் புரிவான் அல்லாஹ்
சரிநிகர் சாந்தி வாழ்வைத்
தருபவ னவனே என்றே
உறுதியோ ருரைத்தா ரோடே
எழுப்பெமை யாஸ லாமே

20

அல் முஃமின் (அபயமளிக் கிறவன்)
வழிகேடன் ஷைத்தான் றம்மின்
வழிசெலா தவன்றன் தீங்கில்
விழாதெமைக் காக்கும் நாயன்
வேறிலை அல்லாஹ் வன்றி
முழுவது மவனே எம்மின்
வழித்துணை அபயம் என்றார்
விழிமுன்னே மறுமை காண
வைத்திடு யாமுஃ மீனே

21

அல் முஹைமின் (கண்காணிப்பவன்)
பார்க்கின்ற இடங்க ளெல்லாம்
பாவங்கள் சூழ்ந்தி ருக்க
நோக்கையுஞ் செவிப்பு லன்றன்
நாட்டமுந் தவிர்த்துக் காப்போன்
தீர்க்கமாய் அல்லாஹ் என்ற
தெளிவினை உரைத்த வேந்தர்
சேர்க்கையில் மறுமைப் பேற்றைத்
தந்திடு யாமு ஹைமினே

22

அல் அஸீஸ் (மிகைத்தவன்)
எல்லாமே யாகு மெம்மால்
என்கின்ற மமதை கொண்ட
புல்லரை வென்றோன் அல்லாஹ்
புகன்றவ னவனே யென்ற
சொல்லினால் இறைய வன்றன்
சக்தியை விளம்பிப் போந்தார்
எல்லைக்குள் மறுமை நாளில்
எமையருள் யாஅ ஸீஸே

23

அல் ஜப்பார் (அடக்கியாள்பவன்)
சர்வமும் நாமே யென்னுந்
தருக்கரின் பலமொ டுக்கிப்
பரிவினை இயலார் பக்கல்
போர்த்துவோன் நானே யென்ற
கருத்தனின் வாக்கு ரைத்த
காத்தமுன் நபிக ளண்டி
இருத்தலை மறுமைப் பேறாய்
எமக்களி யாஜப் பாரே

24

அல் முதக்கப்பிறு (பெருமைக்குரியவன்)
பற்பல மேலாம் செய்கை
புரிந்துமே பெருமை கொள்வார்
உற்றதாம் புகழுக் கெல்லா
ஊக்கமும் அளித்தோன் வல்லோன்
முற்றுமே பெருமைக் கன்னான்
மாட்சிமை பொருட்டா மென்றார்
பொற்புறு மருகி லெம்மைப்
பகர்யாமு தக்கப்பி றன்றே

25

அல் ஹாலிக் (படைப்பவன்)
ஆகுக வென்னுஞ் சொல்லால்
அனைத்தையும் படைக்க வல்லோன்
ஏகனே ஆற்றல் மிக்கோன்
இகத்தொடு கோள்க ளெல்லாம்
ஆகின என்று ரைத்த
அன்னவன் தூத ரோடு
போகிக்க மறுமைப் பேற்றை
யாஹாலிக் அருளு வாயே

26

அல் கப்பார் (மிக்க மன்னிப்பவன்)
செய்கின்ற பாவ மெல்லாம்
சீர்தூக்கிப் பணிந்தி ரந்தால்
வையத்தைப் படைத்துக் காப்போன்
வழங்குவான் மன்னிப் பென்னும்
மெய்யுரை செப்பி மாந்தர்
வழிபட வைத்த நாதர்
துய்யோன்முன் தோன்று காலை
சேரமை யாகப் பாறே

27

அல் வஹ்ஹாப் (கொடையாளன்)
வேண்டுவோர் தமக்கும் வேண்டார்
வேண்டாத போதும் வேண்டித்
தான்தரச் செய்வோன் மன்றில்
தனித்துநாம் நிலைபெ றாதே
பூண்டிடச் செய்வாய் எம்மான்
புறத்திலே நல்லா ரோடு
வான்மறை தந்த வல்லோய்
வள்ளலே யாவஹ் ஹாபே

28

அர் றஸ்ஸாக் (உணவளிப்பவன்)
யாரினுக் கியது வேண்டும்
என்றுமே ஆய்ந்த றிந்து
வாரியே வழங்கு கோன்மை
வரித்தவன் அல்லாஹ் என்னும்
காரியத் துயர்வைக் கூறிக்
கரங்கொண்ட அனைத்தும் ஈந்தார்
சார்ந்தெழ மறுமை வாழ்வைத்
தந்தருள் யாரஸ் ஸாக்கே

29

அல் அலீம் (மிக அறிபவன்)
வானொடு பூமி தன்னில்
வாழ்வினைக் கொண்ட வெல்லா
ஊனுடை மனுஜின் அற்ப
உயிரையும் அறியும் மேலாம்
ஞானத்தைக் கொண்டோன் அல்லாஹ்
நித்தியன் மட்டு மென்ற
ஞானரோ டெமையெ மும்ப
நாடுவாய் யாஅ லீமே

30

அல் முஇஸ்ஸு (கண்ணியப்படுத்துவோன்)
கொடுப்பவர்க் கென்றுங் குறைவிலை என்ற
கருணைநபி
கொடுக்குங் கரமுயர் வானது என்னுங்
கருத்துரைத்தார்
கொடுத்தே சிவந்த கரத்துடை யாரவர்
கூட்டமதில்
கொடுப்பனந் தாராய் மறுமையின் பேறென
யாமுஇஸ்ஸே

31

அல் கரீம் (தயாளன்)
கேட்பதைக் கேட்பான் கொடுப்பான் குறையறக்
கேட்பவர்க்கே
வேட்டுத லன்னான் விரும்பும் "இபாதத்"
அவனிடத்தே
கேட்டிடு என்றாரெங் கோமான் மறுமையின்
மன்றிலிலே
மீட்டிடு வாயெமை வேண்டுத லேற்றுநீ
யாகரீமே

32

அர் றகீப் (கண்காணிப்பவன்)
அளவை நிறுவை அனைத்திலும் நீதி
அமைவுறுக
பிழைத்திட வேண்டா பிறர்பால் கொடுப்பதில்
வாங்குவதில்
மொழிந்தவர் ஏந்தல் முஹம்மத் மறுமையில்
அன்னவன்முன்
எழுந்திட வையெமை ஆதியே ஏகனே
யாறகீபே

33

அர் றஊப் (இரக்கமுடையவன்)
வயதில் இளையோர் வறியோர் இரப்போர்
அனாதைகள்பால்
தயவினைக் காட்டல் தருமம் அவர்தமை
ஆதரித்தல்
உயர்வெனக் கூறி உறுதுணை செய்த
நபியவர்கள்
அயலி லிருக்க அருள்வாய் மறுமையில்
யாறஊபே

34

அல் ஹகம் (தீர்ப்பளிப்பவன்)
இருபுலத் தாரிடை ஏற்படும் மோதல்
இடைநடுவே
உருப்பெறும் தீர்ப்பில் ஒற்றுமை செய்திட
வேண்டிவரின்
பொறுப்பொடு தீர்ப்பை வழங்கிய நாதர்தம்
சந்நிதியில்
மறுமையில் தங்கிடு மார்க்கமுந் தந்தருள்
யாஹகமே

35

அல் முகிஸ்ஸு (கண்ணியப்படுத்துவோன்)
கண்ணியம் செய்தல் கடனாம் முதியவர்
கற்றவரை
பெண்ணினத் தாரினைப் பெற்றோர் வயதினில்
மூத்தவரை
கண்ணியம் செய்தார் கருணை நபிகளார்
அவருடனே
பின்வரு நாளினில் பக்கத் தருளுவாய்
யாமுகிஸ்ஸே

36

அல் அலிய்யு (மிக உயர்ந்தவன்)
பட்டம் பதவி புகழ்மரி யாதை
பிறவின்னவை
கிட்டவென் றாசையைக் கொண்டலை மாந்தர்
விளைதனிலே
பெட்புறும் ஏந்தலைப் பற்றிடில் மேன்மை
யவர்புலத்தே
கிட்டிடப் பின்னாள் கரந்தரு வாயருள்
யாஅலியே

37

அஸ் ஸபூர் (பொறுமையுள்ளவன்)
சினத்தினைக் கொன்றோர் செயங்கொண் டவராம்
பொறுமைதனை
மனத்தினி லேற்றோர் முஹம்மதர் பாதையில்
செல்லுபவர்
முனைந்தனர் கொல்லப் பலபேர் நபியும்
மனம்பொறுத்தார்
அணிசேர் அவருடன் ஆகிறத் தின்வழி
யாஸபூரே

38

அல் கபூர் (மிகவும் மன்னிப்பவன்)
குற்றமி ழைப்பவர் குற்றமு ணர்ந்தே
வருந்திவரின்
பற்றுறு வன்னார் பிழைபொறு பண்ணவன்
தூதுவர்போல்
குற்ற மிழைக்காக் கருணை நபியவர்
கூட்டமதில்
உற்றிடு பாக்கியம் ஒப்பு மறுமையில்
யாகபூரே

39

அர் றஊப் (இரக்கமுடையவன்)
மழலைகள் சிற்சிறு பாலகர் ஆதுலர்
பார்வையற்றோர்
உழைத்திட வாகறும் ஊனர்கள் தம்பா
லிரங்கிடுவீர்
எழுத்தறி யாதார் இயல்பஃ தேற்பீர்
மறுமையிலே
எழுந்திடச் செய்யவர் இன்முகப் பார்வையில்
யாறஊபே

40

அல் ஹலீம் (சகிப்புத்தன்மையுடையவன்)
பொறுத்திட வொண்ணாப் பகைமை வரினும்
பொறுமையுடன்
முறைப்படி ஆய்ந்தே முடிவினைக் கொள்வீர்
முஹம்மதரின்
முறைமை அதுவே முயல்விலும் வெற்றியுங்
கண்டவவர்
மறுமையி லுன்பால் வருகையிற் சேரெமை
யாஹலீமே
41

அல் மத்(த்)தீன் (உறுதியானவன்)
கொண்டதாம் கொள்கையிற் குன்றி யளவுந்
தளர்வடையார்
அண்டி வரினிடர் அஞ்சார் தொடர்ந்தார்
நபியவர்போல்
நன்றே முயற்சி நலந்தரும் உண்மை
மறுமையிலே
அண்ண லவரோ ரெடமையும் எழுப்புவாய்
யாமதீனே
42

அல் ஹாபிழ் (கைப்பற்றுவோன்)
நம்பி வருவோர் நலமுறக் காப்பது
நற்கடனாம்
வெம்பசிக் குண்ண வழங்குதற் கொப்பது
வேண்டுபவர்
தம்மினுக் கேற்றவை செய்தார் முஹம்மத்
மறுமையிலே
உம்மி நபியுடன் எம்மை எழுப்பிவை
யாஹபீழே

43

அல் வதூது (பிரியமுடையவன்)
நேசிப்போர் தம்மைநாம் நேசித்தல் வேண்டுமே
நேசமிலார்
நேசிக்கும் பான்மை நெறிகொள வைத்தல்
நலமருளும்
நேசிக்கார் தம்மையும் நேசித்தார் நாதர்பின்
மீண்டிடுநாள்
நேசித்தார் தம்மொடு மீட்டுவாய் எம்மையும்
யாவதூதே

44

அல் வகீல் (பொறுப்பேற்பவன்)
பொறுப்பினை ஏற்றிடின் பற்றுதல் வேண்டும்
பிறரெவரும்
உறுத்திடா வாறே உவத்தல் கடனிறை
உண்மைநபி
இறைப்பணி செய்தார் இறையாணை ஏற்றே
இடர்பொறுத்தே
மறுமையின் பேற்றை நபியோ டெமக்கருள்
யாவக்கீலே
45

அர் றஊபு (இரக்கமுடையவன்)
பச்சிளம் பால கர்கள்
பார்வையில் லாத பேர்கள்
பிச்சைக்கென் றலையு வோர்கள்
பசித்தவர் பிணியா ளர்கள்
நிச்சயம் அன்பு காட்ட
நேசிக்கத் தக்க பேர்கள்
நற்செய லென்றா ரோடு
நமையுஞ்சேர்த் தருள்யா றஊபே
46

அஷ் ஷஹீத் (சாட்சியாளன்)
சத்தியம் பேணச் சாட்சி
சொல்வது தரும மாகும்
முத்தொழில் புரியும் வல்லோன்
முன்னென மனதிற் கொள்வாய்
சத்தியங் காத்தார் வாழ்வில்
திருநபி முஹம்மத் அன்னார்
மத்தியி லைமையெ முப்பு
மறுமையில் யாஷ ஹீதே
47

அல் முதகப்பிர் (பெருமைக்குரியவன்)
செய்தவை எண்ணி முற்றுந்
தலைக்கனங் கொள்ள லாகா
மெய்யதாய்ப் பெருமை கொள்ளல்
மமதையைத் தோற்று விக்கும்
வையத்தி னருளாய் வந்த
வள்ளலார் கொள்ளாச் செய்கை
துய்யனே யவரோ டெம்மைச்
சேர்த்துவை யாமுத கப்பிரே 48

அல் கப்பார் (மிக்க மன்னிப்பவன்)
தவறினைச் செய்தோர் தம்மைத்
தானாக மன்னி தப்பைப்
பவமென உணர்ந்தே யுன்பால்
படியேறி வருங்கால் ஏற்றே
உவந்திடு மன்னிப் பெங்கள்
உயர்நபி செய்கை யன்னார்
அவைதனில் இருப்பச் செய்வாய்
ஆகிறத் யதேகப் பாரே
49

அவ் வாலீ (உதவியாளன்)
பிறருக்கென் றுதவி செய்தல்
பண்ணவன் அருளைச் சேர்க்கும்
மறுத்திடாய் இயலு மாயின்
முடிந்ததை ஒப்பி ஈவாய்
அறிந்துவை அளித்தா லொன்றை
அதன்பல மடங்காம் என்ற
இறைநபி யோடே பின்னாள்
எமையுஞ்சேர் யாவா லீயே
50

அஸ் ஸமத் (தேவையற்றவன்)
தேவையுள் ளோர்த மக்குத்
தக்கதாம் தேவை யோர்ந்து
தேவையை இயன்ற மட்டில்
செய்வது தர்ம மாகும்
தேவையே இல்லான் தூதர்
தம்மொடு மறுமை நாளில்
சேவிதம் யெமையுஞ் செய்வாய்
தேவையில் யாஸ மத்தே

51

அல் கபீர் (நன்கறிபவன்)
வதந்தியைப் பரத்தல் கூடா
விசாரித்தே யறியு மட்டும்
சதிகளும் இருத்தல் கூடும்
தீங்கினைத் தோற்று விக்கும்
மதியுயர் நபிகள் உம்மத்
வழிகெடார் மறுமை வாழ்வில்
உதவிடு வவரோ டொன்ற
ஒப்பிலாய் யாக பீரே

52

அர் ரஷீத் (வழிகாட்டுவோன்)
நேர்வழி மக்க ளுக்கு
நாடுதல் பெற்றோர் பங்கு
சீர்சிறப் போடு வாழ்வார்
சொற்படி பற்றி வாழ்ந்தால்
காரணர் காட்டித் தந்தார்
கடைத்தேற வழிக ளன்னார்
சேர்பதி மறுமை வாழ்வில்
சேரமை யார ஷீதே

53

அல் கஹ்ஹார் (அடக்கியாள்பவன்)
பிறரினை அடக்கி யாளும்
பண்புளோர் பின்னோர் போழ்தில்
பிறரினால் அடக்கி யாளப்
படுநிலை வருதல் கூடும்
பிறர்தனை மதித்து வாழ்ந்தார்
பண்ணவன் தூதர் அன்னார்
புறத்தினில் மறுமை நாள்நாம்
பதியவை யாகஹ் ஹாரே

54

அல் கையூம் (நிலைத்திருப்பவன்)
நிலைப்பதின் றெதுவும் பூவில்
நிச்சயம் அழியு மோர்நாள்
பலங்கொண்டு வாழ்ந்த பேரும்
பதந்தளர்ந் தழிந்தார் ஆட்சிப்
பலங்கர மிருந்த போதும்
பற்றற்ற நபிகள் பால்நாம்
நிலைத்திட மறுமை வாழ்வை
நமக்கருள் யாகை யூமே

55

அல் முதில் (இழிவடையச் செய்வோன்)
பிறரினை இழிவு செய்தல்
பாவத்தில் சேரும் பண்பு
உறினது நம்பால் சற்றும்
உவந்திடோம் உண்மைத் தூதர்
நெறிபற்றி வாழ்வோர் செய்யார்
நல்வழி காட்டிச் சென்றார்
மறுமையில் அண்ண லார்பால்
வையெமை யாமு தில்லே

56

அல் ஹலீம் (சகிப்புத்தன்மையுடையவன்)
பொறுமைநற் சகிப்புத் தன்மை
பெற்றிடில் மனித வாழ்வில்
உறாதிடர் தவிர்த்தல் கூடும்
ஏந்தலர் பொறுமைக் குன்றாம்
குறுமதி கொண்டோர் செய்கை
காருண்யர் பொறுத்து வென்றார்
மறுமையில் நபிக ளோடு
வாழச்செய் யாஹ லீமே

57

அல் முஇஜ் (கண்ணியப்படுத்துபவன்)
கற்றவர் மூத்தோர் தம்மைக்
கண்ணியஞ் செய்யுஞ் செய்கை
பொற்புறுஞ் செய்கை யாகும்
பெருமானார் வழிந டந்தோர்
பற்றினர் மதிப்ப ளித்தார்
பரிசுத்த நபிக ளோடே
மறுமையில் எமையுஞ் சேர்ப்பாய்
முதலவா யாமு இஜ்ஜே

58

அர் ரஷீத் (நேர்வழிகாட்டுவோன்)
வழிகேட்டில் அலையு வோரின்
வாழ்வொளி பெறவென் றெண்ணி
வழிகாட்டி வாழ வைத்தல்
வள்ளலெம் பெருமான் செய்கை
இழிவுற்ற மனுக்கு லத்தை
ஏற்றமுற் றுயர வைத்தார்
எழுப்பெமை பின்னாள் நாதர்
இருப்பிடம் யார ஷீதே

59

அல் லதீப் (நுட்பமாகச் செய்கிறவன்)
செய்வதைத் திருந்தச் செய்தல்
செயந்தரும் செய்கை தன்னில்
தொய்வுறின் தோல்வி எஞ்சும்
திருவொடு புகழும் மாந்தும்
வையத்தின் கொடையாம் எம்மான்
வெற்றியின் நுட்பம் சீர்மை
உய்த்தெழ அவரோ டெம்மை
உவந்திடு யால தீபே

60

அல் முஸவ்விர் (உருவமளிப்பவன்)
உருவங்கள் செய்துமே அந்நாளில் தெய்வமாய்த்
தோத்தரித்தோர்
ஒருதெய்வத் தோத்திரம் ஒப்பிய மாந்தராய்
ஒன்றிணைந்தார்
திருநபி முஹம்மதர் தாங்கிய கொள்கையாம்
யாமுஸவ்விர்
கருணை நபியுடன் தோற்றெமை பின்னாள்
இரந்தனனே

61

அஷ் ஷகூர் (நன்றிபாராட்டுபவன்)
செய்நன்றி சொற்பமென் றாயினும் மற்றவர்
செய்தவைக்குத்
துய்யவன் பாலொடு செய்தவர் பாலதும்
செப்பிடுக
கையொடு நன்றியைக் காலம் தளரத்திடேல்
கூறிவைத்தார்
உய்த்திடும் நாளினில் எம்மையும் கூடவை
யாஷகூரே

62

அல் முகீத் (ஆற்றலுள்ளவன்)
ஆற்றல் அளித்தவன் அல்லாஹ் அவன்வழி
ஆற்றலினைப்
போற்றிச் செயற்படல் புண்ணிய முண்டாம்
அவன்வழியில்
மாற்ற மிலாதுமே வாழ்ந்தார் நபிகள்
மறுமையிலே
ஏற்றிடு வாயெமை அன்னர் புலத்தெமை
யாமுகீதே

63

அல் ஜலீல் (கண்ணியமானவன்)
கண்ணியம் பேணல் கடமைநம் வாழ்வினில்
பெற்றவரைத்
திண்ணமாய்க் கற்றோர் முதியவர் தம்மையும்
ஞானவழி
பண்புற வாழ்ந்த பெருமான் செயலது
பின்வருநாள்
கண்ணிய ரோடெமைக் கூடவை பந்தியில்
யாஜலீலே

64

அல் ஹகீம் (ஞானமுடையோன்)
ஞானமுங் கல்வியும் நல்லவர்க் காமவை
நல்கிடுக
ஈனருக் கில்லையாம் என்றும் பயன்தரா
என்பதறி
வானவன் தூதர் வழங்கிட வைத்ததாம்
வேண்டுவோர்க்கே
காணவை தோற்றுநாள் காருண்ய ரோடெமை
யாஹகீமே

65

அல் ஹமீத் (புகழுக்குரியவன்)
பேர்புகழ் வேண்டிப் பிழைவழி செல்லுவோர்
பற்றிடினும்
ஏற்புடைத் தாகா இழிசெயல் தங்கிடா
எம்பெருமான்
சார்புறார் அன்னார் நபிகள் புகழ்ந்திடப்
பட்டவராம்
சார்புற வையெமைப் பின்னாள் அவரொடு
யாஹமீதே

66

அல் முன்தகிம் (கண்டிப்பவன்)
தப்பிழைத் தோர்செய்த தப்பினுக் கேற்பவே
தண்டனையை
ஒப்புதல் வேண்டும் ஓரணு வேனும்
அதிகமதாய்
ஒப்பிட வைத்திடல் ஔவாச் செயலாம்
மறுமையிலே
செப்பிய நாதர் தலத்தி லெமையுஞ்சேர்
முன்தகீமே

67

அல் பஸீர் (பார்ப்பவன்)
பார்வையைத் தாழ்த்துதல் பெண்ஆண் பிறவியில்
வேறிலையாம்
பார்வை பவத்தின் முதற்படி நோக்கால்
பவம்பெருகும்
காருண்ய மாநபி கூற்றது கொள்ளல்
கடமையெமைச்
சேர்த்துவை ஆகிறத் தெம்மான் சந்நிதி
யாபஸீரே

68

அல் முஜீப் (பதிலளிப்பவன்)
வினாவுக் குகந்த விடையளி கேள்வி
விளக்கமுடன்
வினவுவ தாயினும் வேண்டும் விளக்கமும்
வேண்டுபவர்
சினக்கும் வகையினில் சொல்விளம் பாதே
நபிவழியாம்
இனிக்கப் பதிலுரைத் தார்பால் எழுப்புவாய்
யாமுஜீபே
69

அல் மஜீத் (மகிமைவாய்ந்தவன்)
கல்வி அறிவுயர் பண்புடை யோரே
சபைமுதன்மை
நல்கிடக் கொள்வார் நலமே யுயர்புகழ்
கொண்டவராம்
சொல்லுஞ் செயலதுஞ் சேர்ந்திருந் தாலே
மகிமைபெறும்
கல்லார் நபிபால் கியாமத் தெழுப்புவாய்
யாமஜீதே
70

அல் முமீத் (மரணிக்கச் செய்பவன்)
காரண மற்றுக் கொலையொன் றியற்றல்
கொடியபவம்
காரணங் கொண்டு கொலையொன் றியற்றல்
கடமையதாம்
சீரிய மார்க்கமுஞ் செப்பும் வழிமுறை
சொல்லியவக்
காரண ரோடெமைக் கூடவை ஆகிறா
யாமுமீதே

71

அல் அழீம் (மகத்துவம்மிக்கவன்)
பொய்புரட் டற்றிழி பாவங்கள் செய்யாப்
பிறவிகளே
மெய்யாய் மகத்துவம் மிக்கார் மறுமையில்
முன்னவன்முன்
வையத் தருள்நபி மன்னவ ரீர்மை
முதலவராம்
வையவர் மன்றில் மறுமையின் பேறெண
யாஅழீமே

72

அல் அஹத் (ஒருவன்)
எதிலும் தனித்துவம் ஏற்பதே மேலாம்
இயன்றவரை
புதிதாய்ப் பிறர்செயா தொன்றினைச் செய்தால்
புகழ்பெருகும்
விதியினை நொந்துமே வாழா திருத்தல்
மடைமையெம்மான்
மதியுரைக் காயவர் மன்றில் எழுப்புவாய்
யாஅஹதே

73

அல் கவிய்யு (வலிமை மிக்கவன்)
உடல்வலு வுண்டென உள்ளத்தி லேற்றே
உடலிளைத்தோர்
அடிமைக ளென்றே அடிமைப் படுத்தி
அடக்கிடுவோர்
கொடுமை இழைப்பவர் காலமும் மாறிடில்
கால்பிடிப்பர்
அடிமைத் தளையறுத் தார்புலம் எம்மைமீள்
யாகவிய்வே

74

அல் கயூம் (நிலைத்திருப்பவன்)
நிலையிலை எஃதுமே நிச்சயம் மாய்ந்திடும்
பின்னொருநாள்
அலைகடல் வான்மலை அஃறிணை மன்னுயிர்
மாக்களுமே
நிலைப்பவன் நீயெனும் நம்பிக்கை சொன்ன
நபியுடனே
நிலைபெற நாடுவாய் நாளை மஃஷரில்
யாகயூமே

75

அல் பாஸித் (விரிவாக்குபவன்)
மனுக்குல நன்மைக் காக
மற்றவர் செய்த தொன்றும்
அணுவென இருந்த போழ்தும்
அஃதினை விரிவு செய்தே
அனைவர்க்கும் பொதுவென் றாக்கல்
ஆகுமாம் பணிமு ஹம்மத்
பணியதாம் அன்னா ரோடே
பழகவை யாபா ஸித்தே

76

அர் ராஃபி (உயர்த்துபவன்)
ஆளுமை மிக்க பேரை
அறிந்தவர் உயர்வுக் காகத்
தோள்தரல் சீர்மை யன்னார்
தம்மொடு பிறர்க்கு மாக
வாழுவார் நன்மை செய்வார்
வானவன் தூதர் போல்நாம்
மீளுநாள் நபிக ளோடு
மீளவை யாராஃ பீயே

77

அல் முக்ஸித் (நீதியானவன்)
தீர்பொன்று கூறுங் காலை
சத்தியந் தவறேல் பக்கம்
சார்வது பொல்லாப் பாவம்
தர்மத்தைக் கொல்லல் போன்றாம்
காருண்ய நபிகள் கோமான்
கடுகெனும் பிழைத்தா ரில்லர்
சேருநாள் எம்மா னோடு
சேர்த்திடு யாமுக் ஸித்தே

78

அல் மானிஃ (தடுப்பவன்)
தவறொன்றைக் கண்க ளுற்றால்
தடுத்திடல் வேண்டும் முன்னர்
செவித்திடச் செய்ம றுத்தால்
தட்டிக்கேள் இயலா தாயின்
உவப்பிலை யாங்கி ருத்தல்
உடனகல் நபிகள் வாறே
எமையவ ரோடு பின்னாள்
எழுப்புவாய் யாமா னிஃவே

79

அல் வாஜித் (நிலைத்திருப்பவன்)
நிலைத்திலை எவரும் வாழ்வில்
நிலைப்பது மில்லை ஆக்கை
வலுவிழந் தழிவ துண்மை
வரலாற்றில் வாழ்தல் வேறாம்
நிலைபெற நலங்கள் செய்தால்
நிச்சயம் வாழ்வாய் பின்னாள்
நிலைபெற நபிக ளோடே
நீயருள் யாவா ஜித்தே

80

அல் முக்ததிர் (ஆற்றலுடையவன்)
தனித்தனி மனித ருக்குத்
தனித்தனி ஆற்றல் தன்னைத்
தனித்தவன் தந்தே யுள்ளான்
தேர்ந்ததைக் கொள்ளல் வேண்டும்
மனுக்குலத் தருளாய் வந்த
மாநபி பதவி ஈந்தார்
இனங்கண்டே அன்னா ரோடே
எழுப்புயா முக்த திர்ரே

81

அல் முகத்திம் (முற்படுத்துவோன்)
முன்னிலைப் படுத்து யார்தான்
முடிந்தவர் ஆற்ற வென்றே
பின்னங்கள் சேரா வெற்றி
பணிந்திடும் அவர்பால் எம்மான்
சொன்னபோல் செய்த தஃதே
செயற்படு தவறின் தோல்வி
முன்வரும் நபியோ டெம்மை
மீட்டுயா முகத்திம் நீயே

82

அல் அவ்வல் (முதலானவன்)
முதன்மையை நோக்கி வாழ்வில்
முன்நட முயற்சி செய்வாய்
உதவிகேள் இறையி டத்தே
உண்டது கொள்ளை கொள்ளை
பதவியில் மோகம் வேண்டாம்
பற்றுவந் துற்ற போழ்தில்
எழுவை௵ துரைத்தா ரோடே
யாஅவ்வல் மறுமை நீயே

83

அல் ஆகிர் (கடைசியானவன்)
பந்திக்கு முந்த வென்று
பதறாதே பந்தி நோக்கி
வந்தவா றமைநீ வேளை
வரும்போது முன்னே செல்லு
புந்தியில் முதல்வர் எம்மான்
பின்னவர் வழியந் நாதர்
சொந்தம்சேர் ஆகி றாவில்
அல்ஆகிர் நீயே காப்பு

84

அல் காதிர் (சக்கதியுள்ளவன்)
சக்திமான் பலவான் என்ப
சொல்வதெவ் வாறோ வாகாய்ப்
புத்தியில் லாது போயின்
பலத்தினால் பயனே இல்லை
புத்திக்கே முதன்மை தந்தார்
பின்பலம் நபிகள் அந்நாள்
உத்தமர் பக்கல் சேர்ப்பாய்
அல்காதிர் மறுமை நாளே

85

அத் தவ்வாப் (பாவமன்னிப்பை ஏற்பவன்)
குற்றமொன் றிளைத்த பேர்கள்
குணங்கொண்டு மன்னிப் பேந்தின்
பெற்றிடச் செய்வா யஃதை
புண்ணியர் வாக்கு மஃதாம்
பற்பல செய்தார் எம்மான்
பொறுத்தருள் செய்தார் அன்னார்
பொற்புறு பதியி லெம்மைப்
பதியவை அத்தவ் வாபே

86

அல்ஜாமிஃ (ஒன்று சேர்ப்பவன்)
குடும்பத்துள் பிளவு தோன்றின்
காரண மறிந்தே சேர்த்தல்
அடுத்துளோர் கடமை யாகும்
அடிதடி சண்டை தோன்றா
படைபல மிருந்து மெம்மான்
பகைவரோ டுறவு கொண்டார்
கொடையருள் அவர்பா லொன்றிக்
கடைத்தேற அல்ஜா மிஃவே

87

அன் நாஃபிஃ (பலனளிப்பவன்)
நல்லதே செய்பி றர்க்கு
நாடாதே துன்பம் செய்ய
இல்லாதோர் தம்மைத் தேடி
இயன்றவா றுதவுவாய் எம்மான்
நல்லதே செய்தார் யார்க்கும்
நல்லதே செயப்ப ணித்தார்
வல்லவா அன்நாஃ பிஃஹே
மீழும்நா ளவரோ டேற்பாய்.

88

அழ் ழாஹிர் (மேலானவன்)
மனிதருள் மேலாம் மாந்தர்
மனத்தூய்மை கொண்டோ ராகும்
சினத்தினை அடக்கு வோரும்
தர்மசிந் தனையுள் ளோரும்
கனிவுறு மனத்தி னோரும்
கூடுவர் நபிக ளோடே
ஜனித்திட அன்னார் மன்றில்
செய்குவாய் அழ்ழா ஹிர்ரே
89

அல் கனிய்யு (தேவையற்றவன்)
எத்தேவை வந்த போழ்தும்
இறைவனின் நாட்டங் கொள்வாய்
நித்தமும் வணங்கு வுன்றன்
நீள்கரம் வெறுமை யாகா
சத்தியத் தூதர் வாழ்வின்
தேட்டமும் அவன்பா லாகும்
நித்தியா அல்க னிய்யு
நபியொடு தோற்று வாயே
90



தமிழ்ப் பிரபந்த இலக்கியம் 96 .அவற்றுள் மாலை இலக்கியமும் ஒன்று. மாலை இலக்கியம் "பல்சந்தமாலை" யுடன் 28 ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் 200 க்கு மேற்பட்ட மாலை இலக்கியங்கள் புனையப்பட்டுள்ளன.
ஒரு பொருள் குறித்து பல வகைச் செய்யுள்களை மாற்றி மாற்றிப் பாடுவதை மாலை என்றார்கள்.
அல்லாஹ்வின் அழகுத்திருநாமங்களை வைத்துப் புனையப்பட்டுள்ள "இறையருள் மாலை" காப்பியக்கோவின் எழுத்தாற்றலின் இன்னொரு வெட்டுமுகமாகும். இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆக்கஇலக்கியம் ஆக்குவதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லா ஒருவர் 'காப்பியக்கோ' ஜின்னாஹ் ஷரீபுத்தீன் என்றால் அது மிகையாகாது. சான்றாக அவர் இயற்றியுள்ள 12 காவியப்படைப்புகள் பன்னாட்டு அறிஞர் பலரால் பாராட்டுப்பெற்றுள்ளது. "இறையருள்மாலை" இறையருள் பெற்ற மாலையாக இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்துக்கு சூடப்பட்டுள்ளது கண்டு அகமகிழ்கிறேன்.

'இலக்கியவாரிதி'
கலாபூஷணம்
**தாஸிம் அகமது**

Aashif A Buhary